# ★ அரசு வாக்குறுதி தவறியதால் நாணய நிதியம் நெருக்குதல்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 6 இதழ் 217
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22 — 9 — 1993

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கை அரசு அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் மேற்படி நிதியத்தின் நெருக்குதலில் இருந்து தவிர்க்கும் நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மே மாதத்தில் சர்வதேச நாணயநிதியத்துடன் இலங்கை அரசு நடத்திய சந்திப்பின் போது சமூக நலத் திட்டங்களை குறைப்பதாக வாக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிக்கல காட்டில் புலிகள்—ராணுவம் மோதல்

(கொழும்பு)
தொப்பிகலக் காட்டுப் பகுதியில், இராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் மோதல்கள் நேற்று ஏற்பட்டுள்ளதாக, இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பகுதியில், விடுதலைப்புலிகளை தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையில் இப்பகுதியில் கடும்மோதல்கள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. இம்மோதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தெரிவிக்கவில்லை.-பி

# ● வடபகுதிக்கு கப்பலில் வரும் பொருள்களை கண்காணிக்க உயர்மட்டக்குழு!

## ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் நியமனம்

(கொழும்பு)
வடபகுதிக்கு கப்பலில் கொண்டு செல்லப்படும் சகலவிதமான பொருட்களையும் கண்காணிப்பதற்கென உயர்மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இராணுவ பிரதான அலுவலர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

யூரியா உரத்தை கப்பல் மூலம் வடபகுதிக்கு கடத்திச் செல்லும் முயற்சி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வடபகுதிக்கு கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படும் அனைத்து பொருட்களையும் இந்த உயர்மட்டக்குழு பரிசீலனை

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலையில் கொலராவுக்கு தனி வார்ட்

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலையில் அதிகரித்துவரும் கொலரா நோயாளரை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக தனியாக கொலராவார்ட் ஒன்று இயங்க

(4-ம் பக்கம் பார்க்க)

சுகாதாரச் சீர்கேடு:

## உணவு விடுதிகளுக்கு கடும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையில், பல உணவகங்கள், தேனீர்சாலைகள் சுகாதார வசதிகள் இல்லாத நிலையில் செயல்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யூரியா கடத்தியவரைத் தேடி பொலிஸார் வலை விரிப்பு

(கொழும்பு)
யாழ்ப்பாணத்துக்கு 10 தொன் யூரியா உரத்தைக் கடத்திச் செல்வதற்கு எத்தனித்த கொழும்பு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரைக் கைது செய்வதற்கு, நாடு முழுவதிலும் உள்ள பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

புறக்கோட்டை ஆல்பன் போல் வீதியிலுள்ள இந்த வர்த்தக நிறுவனம், வெஞ்

(4-ம் பக்கம் பார்க்க)

## தொற்றுநோய் பரவுகிறது அவசர மருந்துகளை அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
அவசர மருந்துகளை யாழ்ப்பாணத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கோரி யாழ். பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி கொழும்பு தலைமையகத்திற்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## உணர்வெழுச்சியுடன் திலீபன் நினைவுநாட்கள் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாளின் ஏழாம் நாள் நிகழ்வுகள் நேற்று தமிழீழ பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

எழுச்சிக்கீதங்களும், தியாகி திலீபன் நினைவுப் பாடல்களும் உரைகளும் நடைபெற மக்களும் போராளிகளும் காலையிலே திலீபனின் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றினர். இதனையடுத்து வட்ட ரீதியாக அடையாள உண்ணாவிரதங்களும் பொதுப்பணிகளும் இடம்

(4-ஆம் பக்கம் பார்க்க

## உணவில் நச்சுத்தன்மை சிறுவன் மயக்கமுற்றார்

(யாழ்ப்பாணம்)
உணவில் இருந்த நச்சுத் தன்மையால் அவ்வுணவை உண்ட எட்டுவயதுச்சிறுவன் மயக்கமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

(2-ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளையர் துப்பாக்கிச் சூடு பொலிஸ் அதிகாரி பலி

### பண்டாரவளையில் சம்பவம்

(கொழும்பு)
பண்டாரவளையில் பம்பரகலை ராவணா எல்ல சிற்றுண்டிச்சாலை ஒன்றில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்றில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தச் சிற்றுண்டிச்சாலையில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றைத் தடுக்க முயன்றபோது கொள்ளைக்காரர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிப் பொலிஸ்

(2-ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. இயக்கத்தினருக்கு ஜனாதிபதி புகழாரம்

(கொழும்பு)
இந்த நாட்டில் பிரிவினைவாத நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி. இயக்கத்தினர் உதவி வருவதாகக் கூறப்படுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

பாததும்பர பகுதியில் ஜம்புநாபிட்டிய என்ற இடத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு:- உரச் சாக்குகள், வெற்றுச் சாக்குகள், எண்ணெய் ஒட்டக்கூடிய கடதாசி, மரக்கறி எண்ணெய் வெற்றுத் தகரங்கள். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 'ஈழநாடு' (ஏ-3436)

### ஆங்கில வைத்திய சேவை

ஆண், பெண், குழந்தைகட்கு ஏற்படும் காய்ச்சல்கள், வாதங்கள், வயிற்று நோய்கள், வாய்ப்புண், தோல்புரை நோய்கள், மாதவிடாய் பிரச்சனைகள், இருமல், மூலவியாதி, வீரியக்குறைவு, மற்றும் பல குணப்படாதநோய்கள் குணப்படுத்தப்படும். இளைப்பாறிய வைத்தியக் கலாநிதி த. விஸ்வநாதன் M. R. S. H. (லண்டன்) டொக்டர் பதிவு இல:-529, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதியர் வைத்தியாலயத்திற்குச் சமீபமாக) சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (சி-462)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், அஸ்மா, வாத ரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குற்றம், இரத்தப் போக்கு, வெள்ளைக்கழிவு, கருவழிதல், கைப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-475)

### வாங்குகின்றோம்

சுத்தமான வேப்பம் விதை, வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகின்றோம். 'மில்க்வைற்' (எ-3440)

### சோதிட நிலையம் புத்தகசாலை

விபரமான பலன்களுடன் ஜாதகம் எழுதிக் கொள்ளவும் வெளிநாடுகளில் பிறந்தவர்களுக்கான ஜாதகங்களை அவ்வவ் தேச சூரிய உதய இராசிப் பிரமாணங்களுக்கு அமைய தேசாந்தர சங்கஸ்கார கணிதம் செய்து பலன்களுடன் ஜாதகம் எழுதிக்கொள்ளவும், பழைய புதிய புத்தகங்கள் வாங்கவும் விற்கவும் நகல் பிரதிகள் செய்வதற்கும் T. V பாலா, சோதிட நிலையம் புத்தகசாலை, (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக) கே. கே. எஸ் வீதி, இணுவில். (சி-478)

### வயிற்றோட்ட நோய் தீர

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படும் சிறுவர்களுக்கு மாத்திரைக் குளிகையும், பெரியவர்களுக்கு கிராணி மாத்திரையும் தேனில் கரைத்துக் காலை மாலை 3 வேளைக்குக் குறையாது கொடுத்து அரோட்டுமா, தெற்பொரி காய்ச்சின உணவை பருகிவர சுகம் காணலாம். மூளை சுரம், போலியோ சுரம், தடிமன், நீரேற்றம், மண்டைவிடிக்கு சுரக் குளிகை வெந்நீரில் சாப்பிட தீரும். யாழ்ப்பாணம் எஸ். பி. மருந்துச்சாலையிலும் கிடைக்கும். டாக்டர் கு. சங்கரப்பிள்ளை, பதிவு இல: 4922, சுழிபுரம். (சி-477)

## மோட்டார் ஊர்திப் பதிவு ஆறும் கட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்திப் பதிவின் ஆறும் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத் தருகின்றனர். வடமராட்சியில் அரச அதிபர் பிரிவுகளான கரவெட்டி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பிரிவுகளையும், தென்மராட்சியில் அரச அதிபர் பிரிவினையும், பளைப் பகுதியையும் சேர்ந்த மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர்கள் தமது மோட்டார் ஊர்திகளை கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகத்தில் கிழமைநாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 3-30 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 1-00 மணி வரையும் பதிவுக்குட்படுத்துமாறு மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தினர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

அத்துடன் வடமராட்சிப் பகுதியினைச் சேர்ந்த மோட்டார் ஊர்திகளின் உரிமையாளர்களது மோட்டார் ஊர்திகள் வடமராட்சியில் அமைந்துள்ள அவசர அனுமதிச் செயலகங்களான மாலுசந்தி, உடுப்பிட்டி செயலகங்களிலும் தென்மராட்சி / பளைப் பகுதிகளைச் சேர்ந்த மோட்டார் ஊர்தி உரிமையாளர்களது மோட்டார் ஊர்திகள் சாவகச்சேரி அவசர அனுமதிச் செயலகத்திலும் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் பரிசோதனைக்குட்படுத்தும் காலம் நேரம் பற்றி பின்னர் அறியத்தரப்படும் என்றும் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ரி)

### கொக்குவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியசீலன் ரஞ்சித் என்ற நாவற்குழியைச் சேர்ந்தவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 18 வயதுடைய பாடசாலை மாணவர் சந்தேகத்தில் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றது. திரு. ஏக்கநாயக்கா தன்னைச் சுட்ட நபர் மீது திருப்பி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அப்போது சந்தேகநபர் காயமடைந்தார். இப்போது அவர் பதுளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் இடம் பெற்ற போது திரு ஏக்கநாயக்காவின் மனைவியும், பொலிஸ் சாரதி ஒருவரும் இருந்தனர். அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை.

சூடுபட்ட சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச்செல்ல முற்பட்ட போது விழுந்துவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

சிற்றுண்டிச்சாலையைக் கொள்ளையிட முயற்சித்த அதே தினத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றையும், தாம் திருடியதாக சந்தேக நபர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-ரி)

### உணவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாவாந்துறையைச் சேர்ந்த நாகேந்திரம் மயூரன் (வயது8) என்ற சிறுவனே முதல் நாள் சமைத்த மீன் கறியையும், பழைய சோற்றையும் மறுநாள் (நேற்று) காலை உண்டதையடுத்து மயக்கமடைந்தார்.

பழைய மீன்கறியில் நச்சுத்தன்மை இருந்தமையே இதற்குக் காரணம் என வைத்தியசாலை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (சு-ரி)

## இன்று

(ஆனைப்பந்தி)

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயத்திற்கும் கொட்டடி நமசிவாயவித்தியாலயத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (1.1)

## விருதுகள் இரவு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நாளை வியாழன் மாலை 5 மணி தொடக்கம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகட்கான விருதுகள் வழங்கும் வைபவம் விளையாட்டு அவைத் தலைவர் திரு. பி.சந்திரகுமார் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். பேராசிரியர் அ. துரைராசா பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி கௌரவிப்பார். விழா இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## தொழிலாளர் கலவிச் சான்றிதழ் வழங்குதல்

யாழப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1989/1990, 1990/1991 இல் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான சான்றிதழ் 1993-10-02 காலை 10-00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும் என்பதை உரியவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்.

(எ-3438)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி இரண்டாம் அரையாண்டுப்

## பரீட்சை-1993

மேற்குறிப்பிட்ட பரீட்சை நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெற இருப்பதால் பரீட்சாத்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து 15-10-1993 க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சாத்திகள் தாங்கள் தோற்றிய பரீட்சைக் கட்டண பற்றுச் சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் செலுத்த வேண்டும்.

பதிவாளர்.

(எ-3487)

## புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டுள்ளது)

201/1 3ம் குறுக்குத்தெரு - யாழ்ப்பாணம்

# முக்கிய அறிவித்தல்

### கிளைக்குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் திகதியில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

01. நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 2-10-1993 சனிக்கிழமை காலம்; முற்பகல் 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரை. அபேட்சகர் நியமனத்தில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அன்றைய தினம் (2-10-93) மு. பகல் 10-00 மணிதொடக்கம் 11-00 மணி வரை தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. தேர்தல் நடைபெறும் திகதி 9-10-1993 சனிக்கிழமை காலம்: மு. பகல் 9-00 மணி தொடக்கம் பி. பகல் 4-00 மணி வரை, கிளைகளுக்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல. | | கிளையின்பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கிளை | இல. | 01. ஊரைதீவு | இல 27 | ஜும்மா | பள்ளிவாசல் | வீதி | யாழ்ப்பாணம் |
| .. | .. | 02. மடத்துவெளி | .. 17 | .. | .. | .. | .. |
| .. | .. | 03. மாவுதிடல் | மணியம் | கடிடம் | திரும்பிவடி | வீதி | .. |
| .. | .. | 05. தல்லைப்பற்று வடக்கு | .. | .. | .. | வீதி | .. |
| .. | .. | 06. தல்லைப்பற்று தெற்கு | இல 29 | ஜும்மா | பள்ளிவாசல் | வீதி | .. |
| .. | .. | 07. மண்காடு | .. 03 | .. | .. | .. | .. |
| .. | .. | 09. மத்தி | இல 147 | மானிப்பாய் | | வீதி | .. |
| .. | .. | 10. பெருங்காடு | .. 174 | கே. கே. எஸ். | | வீதி | .. |
| .. | .. | 12. பெருங்காடு தெற்கு | .. 06 | ஜும்மா | பள்ளிவாசல் | வீதி | .. |
| .. | .. | 13. குறிகட்டுவான் | .. 06 | .. | .. | .. | .. |
| .. | .. | 14. கணேசா | .. 03 | .. | .. | .. | .. |
| .. | .. | 15. இருப்பிட்டி | .. 18 | .. | .. | .. | .. |
| .. | .. | 16. ஐயனாரகம் புலம் | .. 28 | .. | .. | .. | .. |
| .. | .. | 19. நயினாதீவு தெற்கு | .. 201/1 3ம் குறுக்குத் தெரு | | | | .. |
| .. | .. | 20. நயினாதீவு வடக்கு | .. | .. | .. | | .. |

திரு. நா. நவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்

கூட்டுறவு அலுவலகம்.
யாழ்ப்பாணம். (எ-3434)

மணிவாக்கு

பிறரை ஏமாற்றத் துணிந்து முனையும் போது நமக்கே சிவந்தி வலையைப் பின்னிவிடுகிறோம்.

- ஸர் வால்ட்டர் ஸ்காட்

# வடக்கு-கிழக்கில் பயங்கரவாதம் என்பது தேர்தல் வெற்றிக்கான முயற்சி!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மற்றும் பொதுத் தேர்தலில் வெற்றி அடைவதற்குத் தான் "வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சனையில்லை பயங்கரவாதம் தான் உள்ளது" என்ற கருத்துப்பட ஜனாதிபதி டி. பி விஜயதுங்க பேசி வருகின்றாரே என்று கொழும்பில் இருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் கேள்வி எழுப்பியுள்ளன.

கடந்த காலங்களில் இனப்பிரச்சனையை வைத்து அரசியல் ஆதாயம் பெற்றுவந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 24 மணி நேரத்தில் சிங்களம் உத்தியோக பூர்வ மொழியாகும் என்று கூறிய வார்த்தைகளை போன்றே தற்போதைய ஜனாதிபதியின் கூற்று அமைந்திருக்கின்றன என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் மேற்படி கூற்று தமிழ் மக்கள் மத்தியில் கடும் சினத்தை எழுப்பியுள்ள போதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் தமிழரது வாக்குகளின் தமது தலைமையை தீர்மானிக்காமல் இருக்க, ஆட்சி முறையையும் மாற்றி நாடாளுமன்ற ஆட்சி முறைக்கும் அரசு முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

நாட்டில் நிலவுவது பயங்கரவாதமே என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கு தெற்கில் சிங்களவரிடையேயும் படையினர் மத்தியிலும் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் வெளிவிக்கின்றன.

1994ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் எனவும் கூறப்படுகிறது. -ம-வி

# நமது நோக்கு

## பேரரசுகள் நிலைத்ததில்லை!

"நான் இருக்கும் வரை அவர்கள் கோரும் ஈழ இராச்சியமொன்றை வழங்கமாட்டேன்; நாட்டைக் கூறுபோடவும் விடமாட்டேன்!" என ஜனாதிபதி அவர்கள் அண்மையில் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் முழங்கியுள்ளார்!

அதிகாரத்தில் இருப்போர் அப்படித்தான் சொன்னார்கள்; அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள்!

நீண்ட, நெடிய வரலாற்றிலே நாம் கண்ட காட்சிகள்தான் எத்தனை?

புகழ்பெற்ற இரோமப் பேரரசு இன்று ஒரு மூலையிற் சுருண்டு படுத்துக் கிடக்கின்றது. உலகையே கலக்கிய உரோமப் பேரரசு, "எங்குமேது காட்டு வீர்!" எனக் கேட்குமளவிற்கு உருக்குலைந்து ஒடுங்கிவிட்டது!

அண்மைக்காலக் கதை என்ன? பிரித்தானியப் பேரரசு பல கண்டங்களிற் பரவி, யூனியன் ஜாக் கொடியைப் பட்டொளி வீசப் பறக்கவிட்டிருந்தது!

இரண்டாவது மகாயுத்தத்தின்போது பிரித்தானியாவின் பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில். புகழ்பெற்ற பேச்சுத் திறனும், நெஞ்சுரத்தாலும் வெற்றியைக் குவித்த வீரர்.

ஆனால், அந்தப் பெருமையினால், இந்தியா போன்ற நாடுகளின் சுதந்திரக் கோரிக்கையைத் தட்டிக் கழித்தவர்.

அவர் கூறிய மகாவாக்கியம் என்ன?

பிரித்தானிய பேரரசு கரைந்து குலைந்துபோகும் நிகழ்ச்சிக்கு நான் தலைமை தாங்கமாட்டேன்! (I will not preside over the Liquidation of the empire.)

இப்படிச் சொன்ன பெரியார், சில மாதங்களுக்குள் நடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்தார். பல நாடுகள் சுதந்திரமடைந்தன.

இத்தகைய ஏதேச்சாரிகள்பற்றி அறிஞர் அண்ணா கூறிய அழகான உவமை என்ன தெரியுமோ?

"நீண்டு வளர்ந்து நிற்கும் நெடுமரங்களும், அசைந்து, ஆடி, சுழன்று, அடி அறுபட்டு, விழுந்து நொருங்கும், சூறாவளியின்!"

எனவே, ஆட்சித் தலைவர்களின் மேடைப் பேச்சைக் கேட்டு, மதிமயங்கிடமாட்டார்கள் உரிமைக் குரல் எழுப்புவோர்.

நீதியின் பாற்பட்ட, நியாயமான கோரிக்கைகள் தோல்வியுற்றதாக வரலாறு இல்லை!

# தியாகி திலீபனின் நினைவு உண்ணாவிரதமும் சிரமதான பணியும்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 6-வது ஆண்டு நினைவையொட்டி 9-வது நாளான நாளை 23ம் திகதி நடைபெறவுள்ள உண்ணாவிரதம் மற்றும் சிரமதான நிகழ்வுகள் வருமாறு:

வலிகாமம் கோட்டம்:

சங்கானை /அராலி வைரவர் கோவில் சங்கானை, சுழிபுரம் மக்கள். கோப்பாய் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவில், நீர்வேலி, புத்தூர் /ஆவரங்கால் மக்கள் சண்டிலிப்பாய். ஆனைக்கோட்டை மூத்த நயினார்கோவில், மானிப்பாய் ப. நோ. கூ. ச. அங்கத்தவர்கள். உடுவில் /தெல்லிப்பழை-சுன்னாகம் சிவன் கோவிலடி, சுன்னாகம் மக்கள், யாழ்ப்பாணம்-நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, பொம்மைவெளி மக்கள் நல்லூர்-நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, அரியாலை/கந்தர்மடம் மக்கள்.

வடமராட்சிக் கோட்டம்:

கரவெட்டி-சாமியன் அரசடி, நெல் கி. மூ. நெசவு சங்கம், வரணயாய் வடக்கு/கிழக்கு, உடுப்பிட்டி- உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி (கி - சாவி) பருத்தித்துறை-அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி, சமாச உறுப்பினர்கள், பொதுமக்கள்.

தென்மராட்சிக் கோட்டம்:

பளை-பளை பிரதேச சபை முன், உ. வி. அ. பணிமனை, தபாற்கந்தோர், பிரதேச சபை, புலோப்பளை, இத்தாவில் அ. த. பாடசாலை, கொடிகாமம்-ரயில் நிலைய அருகாமை கலைமகள் ச. ச. நி. பாலாவி சரஸ்வதி ச. ச. நி. கரவெட்டி குறிச்சி அரச த. க. பாடசாலை, கச்சாய் அரச த. க. பாடசாலை, சாவகச்சேரி-மணம்குளாய் பிள்ளையார் கோவில், சங்கத்தானை, சரசாலை தெற்கு, நுணாவில் கைதடி. பேச்சி உரிமையாளர் சங்கம், மீசாலைமேற்கு மட்டுவில் சந்திர வெளவித்தி கைதடி - கைதடி சந்திக்கு அருகாமை, கைதடி வடக்கு கிறவளர். ச. ச. நி, கைதடி தென்/கிழ. ச. ச. நி.

தீவகக் கோட்டம்

நல்லூர் கோவில், செம்மா தெரு, மண்டைதீவு. சொர்த்தணி கொட்டடி.

சிரமதானம் மேற்கொள்ளப்படும் இடங்கள்.

வலிகாமம் கோட்டம்:

கோப்பாய் சிறுப்பிட்டி மணிமொழி குளம் துப்பரவு. உடு/ தெல்லி-இளவாலை கும்புத் தொழிற்சாலை முகாம் துப்பரவு முகாம் மக்கள். நல்லூர் அச்சுவேலை மயானம் துப்பரவு.

வடமராட்சிக்கோட்டம்

கரவெட்டி அல்/கிழ ஆலங்கல். பொது மயானம் துப்பரவு செய்தல், உடுப்பிட்டி - நெல். யாழ். வீதிநாவ மடம் புழுப்பெறுக்கி, ஆலடி, வீதி துப்பரவு. நிலைய உறுப்பினர் உடுப்பிட்டி- பிரதான வீதியில் மாவீரர் நினைவு தூபிகள் துப்பரவு செய்தல்.

தீவக கோட்டம்:

லவனிதா குடியிருப்புசந்தை அமைத்தல். (அ)

## இராசிபலன்

22-09-1993

புதன்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 6)

ஸப்தமி மு. இ. 7-14 வரை; கேட்டை மு. இ. 8-18 வரை. இராகுகாலம் நண்பகல் 12-03 முதல் 1-32 வரை. சுபநேரம் மாலை 4-32 முதல் 6-02 வரை. சித்த யோகம்.

மேடம்: உடல்நலக்குறைவு, காரியத் தாமதம், வீண்செலவு.

இடபம்: உப தொழில் லாபம், நன்மதிப்பு, கடமை உணர்வு.

மிதுனம்: குடும்ப சௌகரியம், தொழில் விரிவு, பிறர் உபதேசம்.

கடகம்: உறவினர் மனஸ்தாபம், பயண அலைச்சல், கவலை.

சிங்கம்: முயற்சி தாமதம், அலைச்சல், தொழில் நஷ்டம்.

கன்னி: பணியாள் சகாயம், சுப நிகழ்வுகள், மனக்களிப்பு.

துலாம்: அதிகாரிகள் அனுசரணை, வீண் பயணம், வெறுப்பு.

விருச்சிகம்: பொதுப்பணி, காரிய சித்தி, பணவரவு.

தனுசு: நம்பிக்கை குறைவு, தொழில் நஷ்டம், பகைவர் துன்பம்.

மகரம்: கடன் நீங்கல், புதிய பதவி, உறவினர் வருகை.

கும்பம்: புதிய முயற்சி, புத்திர பெருமை, தெய்வீகச் செலவு.

மீனம்: நண்பர் பிணக்கு, வைத்தியச் செலவு, தாயார் சுகயீனம்.

— ஜோஸ்யர்.

# அமெரிக்கா செல்லும் இலங்கை குழுவுக்கு பாஸ்கரலிங்கம் தலைமை

(கொழும்பு)

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் எதிர்வரும் 28-ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை நடைபெறவுள்ள உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றும் குழுவுக்கு திறைசேரி செயலர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் தலைவராக செல்லவுள்ளார்.

வழமையாக நிதியமைச்சரோ அல்லது அவருக்கு பதிலாக பிரபல மந்திரியொருவரோ கலந்துகொள்ளும் இந்த முக்கிய மாநாட்டிற்கு இரண்டாவது முறையாகவும் திரு. பாஸ்கரலிங்கம் தலைமைதாங்கி செல்வது குறிப்பிடத்தக்கது.

இந்தக்குழுவில் மத்தியவங்கி ஆளுநர் எ. பி. திசநாயக்கா, திறைசேரிப்பிரதிச் செயலாளர் கே. சண்முகலிங்கம் உதவி மத்தியவங்கி ஆளுநர் உட்பட பலர் கலந்துகொள்கின்றனர். -வே-வி

# தி. மு. க. வேட்பாளர்களுக்கு பலத்த கல்வீச்சு

(சென்னை)

தி. மு. க. வேட்பாளர் ஆர்க்காடு வீராசாமியின் கார் இளைஞர் கும்பல் ஒன்றினால் பலத்த கல்வீச்சுக்கு இலக்காகியுள்ளது.

தமதுதொகுதியானராணிப் பேட்டைக்கு நேற்று காரில் சென்றபோதே இத்தகைய கல்வீச்சு சம்பவம் இடம்பெற்றதாக அறியவருகிறது.

இதற்கிடையில் பழனி மக்களவை, மற்றும் ராணிப் பேட்டை சட்டப்பேரவைக்கான வாக்களிப்புகள் சுமுகமாக நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. -க-சி

# விடுதலைக்கு உதவுமாறு யுத்த கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

தமது விடுதலைக்கு மீண்டும் முயற்சி மேற்கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 31 பொலிஸார், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாங்கள் தற்போது தனித்துவிடப்பட்ட நிலையில் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். எமது விடுதலை தொடர்பாக, எமக்கு இருந்த நம்பிக்கை குறைந்து கொண்டே போகின்றது என்று மேற்படி கைதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதேநேரம், விடுதலைப்புலிகளின் காவலில் இருக்கும் எமது பிள்ளைகளின் தற்போதைய நிலைபற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் தமக்கு கூறவதற்கு மறுப்புத் தெரிவிப்பதாகவும் பொலிஸாரின் பெற்றோர்கள், பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்கள். -வீ-வி

நன்னீர் பேணி நலங்களைப் பெறுவோம்

# யாழ். ரோட்டறிக்கு அமெரிக்க விருது

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக் கழகம் கடந்த ஆண்டு ஆற்றிய கழக பணிகளுக்காக அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ரோட்டறி சர்வதேசக் கழகத்தின், தலைவரின் 'கழக சேவைகளுக்கான விருது' வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி விருதானது ரோட்டறி சர்வதேச தலைமையகத்தினால் கொழும்பிலுள்ள ரோட்டறி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் நடக்க ஓர் வைபவத்தில் இவ் விருதானது யாழ். ரோட்டறிக் கழகத்திற்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். ரோட்டறி கழக தலைவர் திரு. வி. வி. செல்லிங்கம் ரோட்டறி பணி உட்பட பல பொது சேவைகளிலும் ஈடுபட்டு வருவதும் தெரிந்ததே. -வி

# மட்டு. அரச ஊழியர்களுக்கு ராணுவ அதிகாரி எச்சரிக்கை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவி புரியும் அரச ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரேணுகா குணவர்த்தன எச்சரிக்கை செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்குத் தமக்கு அரச திணைக்கள அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறு தமக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் 2000ம் ஆண்டுக்குள் சென்றாலும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் அவர் கூறினார். —கே-ரி

# வடக்கு-கிழக்கு முகாம்களில் இராணுவப் பயிற்சி ஆரம்பம்

(கொழும்பு)

தென்பகுதியில் பல இடங்களிலுமிருந்து இராணுவத்துக்கென திரட்டப்பட்ட 7,000 சிங்கள இளைஞர் வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள பிரதான ராணுவ முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு இங்குவைத்தே பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு பிரதான முகாம்களுக்கும் 300 பேர் கொண்ட ஒவ்வொரு படையணி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

முன்னர் ராணுவத்தில் சேர்வதற்கான பயிற்சிகள் தியத்தலாவை, பனாகொட ஆகிய இடங்களிலேயே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## கடற்புலிகளை சமாளிக்க கடற்படை பலம் அதிகரிப்பு

(கொழும்பு)

அதிகரித்துவரும் கடற்புலிகளின் அச்சுறுத்தலை சமாளிப்பதற்கென இறுதியாக கடற்படையில் புதிதாகப் பலருக்கு அரசு பயிற்சி வழங்கி வருகிறது.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் வைத்து இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த வாரத்தில் அங்கு பயிற்சிபெற்ற கடற்படைச் சிப்பாய்களும், கடற்படை அதிகாரிகளும் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர்.

புதிதாக கடற்படைக்கென திரட்டப்பட்ட 238 சிப்பாய்களும், 14 அதிகாரிகளும் இப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறினர்.

திருமலை கடற்படைத்தளத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கடற்படை கொமாண்டர் வைஸ் அட்மிரல் சமரசேகரா கலந்துகொண்டார். (ரி)

## லங்கா சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களுக்கான சம்பள கொடுப்பனவுகள் இன்று 22ம் திகதி புதன்கிழமை தொடக்கம் சுன்னாகத்திலுள்ள தற்காலிக அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது.

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற விபத்து ஒன்றில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

கப்டன் கிருபன் அல்லது பிரசாத் (டேவிட் மாக்கின் ஸிலோ மாக் - வங்காலை மன்னார்) என்ற போராளியே வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

## கொழும்பு செல்லும் நோயாளிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்திய சிகிச்சைக்காக தெரிவுசெய்யப்பட்ட நோயாளிகளும் அவர்களுடன் கூடச்செல்பவர்களும் தங்களுக்கு இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் யாழ் அரசினர் பொது வைத்தியசாலையில் எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொள்ளுகின்றார். (ரி)

## மின்னல் தாக்கி சிப்பாய் பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் மின்னல் தாக்கி ராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். லான்ஸ் கோப்ரல் சில்வா என்பவரே கொல்லப்பட்டவராவார். (ரி)

### தொற்றுநோய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் குடாநாட்டில் கொலரா நோய் போன்ற தொற்று நோய்கள் பரவி வருவதனால் அவ்வாறு பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்குவதற்கு தேவையான மருந்து வகைகளும் அவ்வாறான நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கும் போதியளவு மருந்துவகைகள் கையிருப்பில் இல்லாமையால் இவற்றை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்குமாறு கோரியே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அவசர செய்தியொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவசரமாக அனுப்பிவைக்கப்பட வேண்டிய மருந்துவகைகளுள் டெற்றுசைக்கிளின், சேலைன், குளோரின் போன்றவையும் அடங்குமென அறியப்படுகிறது.

(158-சு-கி-ரி)

### வடபகுதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும்.

இந்தக் குழுவின் சிபார்சுக்கு அடங்கும் பொருட்கள் மாத்திரமே கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதன்படி வடபகுதிக்கு கப்பல் மூலம் பொருட்களை அனுப்பும் நடவடிக்கைகளை இந்தக்குழு ஒருமுகப்படுத்தும். —இ-ரி

### பூரியா கடத்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெசாலை ஆகியவை சிலைகளைத்து மூடப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்கு கடமையாற்றிய பல ஊழியர்கள் விசாரணைக்கென கொழும்பு குற்றத் தடுப்புப் பணியக அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். சந்தேகநபரின் பல ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் இதற்கு முன்னர் தடைசெய்யப்பட்ட பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் சென்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணை தொடரப்பட்டதாகவும் புலனாய்வு அறிக்கைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. —இ

### உணர்வெழுச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றன.

யாழ் குடாவின் பல பகுதிகளிலும் வன்னி மாவட்டத்தில் கிளிநொச்சி, வவுனியா கோட்டங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் முல்லை மாவட்டத்திலும், மணலாறு கோட்டத்திலும் நேற்று இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

நல்லூர் தியாகி திலீபன் நினைவு ஸ்தூபியின் தமிழீழ மாவீரர் பணிமனை மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி அர்ச்சனா ஈகைச்சுடரை ஏற்றினார். நல்லூர் சிற்றூர் பொறுப்பாளர் திரு. சதீஸ் நினைவு ஸ்தூபிக்கு மலர் மாலை அணிவித்தார்.

நல்லூரில் உண்ணாவிரதம் நடைபெறும் இடத்தில் தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. சிவா மலர் மாலை அணிவித்தார். செல்வி அர்ச்சனா ஈகைச் சுடரை ஏற்றினார்.

நீர்வேலியில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை கோப்பாய் சிற்றூர் பொறுப்பாளர் திரு. நேசன் ஆரம்பித்துவைத்தார். தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன். தியாகம் ஈகைச்சுடரை ஏற்றி வைத்தார்.

குருநகர் மவுண் கார்மேல் மண்டபத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை கடற்புலிகளின் கரையோரப் பிரதேசப் பொறுப்பாளர் மாலை அணிவித்து ஆரம்பித்து வைத்தார். சங்கானையில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை சுழிபுரம் சிற்றூர் பதில் பொறுப்பாளர் திரு அல்பேட் ஆரம்பித்து வைத்தார்.

வடமராட்சி கிழக்கு குடாரப்பு கஜநிதி முகாமில் நேற்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. கைதடியில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை நாவற்குழி சிற்றூர் பொறுப்பாளர் திரு. வரதன் ஆரம்பித்துவைத்தார்.

நுணாவிலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சுகந்தன் ஆரம்பித்துவைத்தார். கொடிகாமத்தில் தென்மராட்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் திரு. அமுதன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

முல்லை மாவட்டத்தில் முல்லை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகத்தினர் தியாகி திலீபனின் நினைவாக 3 நாட்கள் தமிழ்விழாவை நடாத்துகின்றனர்.

நேற்றுமுன்தினம் முள்ளியவளையில் ஆரம்பமான இவ்விழா இன்றுவரை நடைபெறவுள்ளது.

வவுனியாவில் சேமமடு வட்டத்தில் நேற்று திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(162-ரி)

### ஜே.வி.பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஐனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஜனநாயகத்தை அழித்து கொலைகார அரசாங்கம் ஒன்று உருவாகுமோ என்ற அச்சம், பொதுமக்கள் மத்தியில் உலவுகிறது. மேலும் ஜே. வி. பி. ஆதரவாளர்கள் மூலம் இதற்கும், பிரிவினைவாதத்துக்கும் ஒத்துழைப்புக் கிடைத்து வருவதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இதில் எந்த வித உண்மையும் இல்லை.

ஜே.வி.பி. இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எமது சகோதரர்கள். அவர்கள் இந்த நாட்டின் அமைதியான மக்கள். அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகளே. எனவே அவர்களுக்கும் சமவிதமான உரிமைகளும் உண்டு என்றார். —இ

### சுகாதாரச்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு, உணவுதயாரிக்கப் படும் உபகரணங்கள், குடிநீர், உணவகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சுகாதாரம் பேணப்படாமல் செயல்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ். நகரிலுள்ள ஒரு ஐஸ்கிறீம் கடை உட்பட எட்டு உணவகங்கள் மூடப்படுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மூன்று தேனீர்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட வேண்டுமென்றும் சுகாதார சீர்கேடுகள் நிவர்த்தி செய்து பூர்த்தியானதும் மீண்டும் செயல் படுவதற்கு அனுமதிக்கப்படுவார்களென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நேற்று பெருமாள் கோவில் ஆலய வீதியில் உற்சவகாலத்தை முன்னிட்டு திறந்து வைத்து உணவுப் பொருட்களை விற்ற வீதியோர கடைகளை உடனடியாக மூடிவிடுமாறு யாழ். மாநகரசபையின் நகரப்பகுதி பொது சுகாதார பகுதியினர் உத்தரவிட்டுள்ளனர்.

இதேபோன்று இன்னும் பல இடங்களிலும் திறந்த நிலையில் வைத்து உணவுப் பொருட்களை விற்ற வீதியோர கடைகளையும் அகற்றுமாறு தொடர்ந்து இதுபோன்ற சமூக சீர்கேடான நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (சு-162, 158-ரி)

## வாந்திபேதி நோய்: மேலும் ஒன்பது பேர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் வாந்திபேதி நோய் வேகமாகப் பரவிவருவது யாழ். போதனா வைத்தியசாலைப் பதிவேட்டிலிருந்து தெரியவருகிறது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட ஒன்பது பேர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுடை, சங்கானை, கொழும்புத்துறை, கட்டுடை கந்தரோடையைச் சேர்ந்தோரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

மேலும் கைதடி அகதி முகாம் முகாமில் பலருக்கு இந்நோய் கண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. —சு-ரி

### யாழ். வைத்தியசாலையில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளது.

வைத்தியசாலையின் மேக நோய்ப் பிரிவின் ஒரு பகுதி இதற்கென ஒதுக்கிவிடப்பட்டுள்ளது.

இங்கே கடமை புரியும் ஊழியர்கள் அடுத்த கிழமைகளில் கடமை புரிவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. (சு-ரி)

### அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி அளித்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை இலங்கை அரசு தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறும் நிதியை எவ்வாறு செலவு செய்கிறது என்பது தொடர்பாக ஆராய்வதற்காக மேற்படி நிறுவனத்தின் சிறப்புக்குழுவினர் அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளனர். நிதியத்திற்கு அளித்துள்ள வாக்குறுதிகளில் ஒருசில சமூக நலத்திட்டங்களின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டுள்ளபோதும் அவை தற்காலிகமாக நிறுத்தப்படும் ஒத்திப் போடப்பட்டுள்ளன. மேலும் அரசு ஊழியர்களின் சம்பளமும் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. —கே-ரி

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமியம்மா இராசதுரை

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது பிரேமச்சந்திரன் வீதி (இராசகாரியர்வீதி) மானிப்பாய் வடக்கில் வசிப்பவருமாகிய திருமதி சிவகாமியம்மா இராசதுரை நேற்று முன்தினம் (20-09-93இல்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், திரு இராசதுரையின் (இளைப்பாறிய லிகிதர், காணி அபிவிருத்தித் திணைக்களம்) அன்பு மனைவியும், திரு ஹரிகரன் (கொழும்பு) திரு. கருணாகரன் (ராஜன்), திரு. ரஞ்சன், திரு. இந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கமலினி, திருமதி ஞானரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி வளர்மதியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-09-93 வியாழன் பிற்பகல் 3-00 மணியளவில் பிரேமச்சந்திரன் வீதி (இராசகாரியர் வீதி)யில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இதனை அறியத் தருகின்றோம்.

தகவல்: ராஜன்.

பிரேமச்சந்திரன் வீதி,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(கி-476)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி(?) கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: